பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 28 செவ்வாய்க்கிழமை 15.11.2022 கதிர் 262

மாத்தளையில் திடீர் சுகவீனமுற்று

## நாற்பது மாணவிகள் வைத்தியசாலையில்

மாத்தளை சுஜாதா மகளிர் பாடசாலையில் கல்வி கற்கும் 40 மாணவிகள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இன்று முற்பகல் ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக மாணவிகள் மாத்தளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 2

# தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்க ஐ.நாவின் பங்களிப்பு அவசியம்

### சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பினர் வலியுறுத்து

**வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் விரைந்து தீர்வு காணப்பட வேண்டும். இந்த விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பங்களிப்பு மிகவும் காத்திரமாக இருக்க வேண்டும்.** 2



## ஹிருணிகா உள்ளிட்ட 15 பேருக்கும் பிணை



கொழும்பில் நேற்று கைது செய்யப்பட்டிருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 15 பேரை தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுதலை செய்ய கொழும்பு பிரதம 2

## வடக்கு ஆளுநர் செயலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம்

### காணி சுவீகரிப்புக்குக் கூட்டத்துக்கு வந்த அதிகாரிகள் மக்களால் விரட்டியடிப்பு; 'சூம்' முறையில் கலந்துரையாடல்





வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தை முற்றுகையிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. வடக்கு மாகாண 2

## இலங்கை, இந்திய நபர்கள் 14 பேர் நடுக்கடலில் கைது

### பீடி இலை மூடைகளைக் கைமாற்றிய போது



(ந.லோகதயாளன்)

இலங்கை – இந்தியா இடையில் நடுக்கடலில் பீடி இலைகளைக் கடத்திய தமிழக 8

## ரயில் விபத்து



நீர்கொழும்பு மற்றும் குரண ரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் இடம்பெற்ற விபத்துக் காரணமாக ரயில் போக்குவரத்துத் 2

## பலாலி விமான நிலைய சேவை இவ்வருட இறுதிக்குள் ஆரம்பம்

### யாழில் இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



(ந.லோக தயாளன்)

இந்த வருட இறுதிக்குள் பலாலி விமான நிலைய சேவைஆரம்பிக்கப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது.

காங்கேசன் துறைமுகம் மற்றும் பலாலி சர்வதேச விமான நிலையத்தின் 8

## காணிக்காகப் போராடத் தமிழர்கள் போல் முஸ்லிம்களும் உடன் இணையவேண்டும்

### மு.காவின் முன்னாள் பொதுச்செயலர் ஹசன் அலி கோரிக்கை



முஸ்லிம்களாகிய நாங்கள் கிட்டத்தட்ட 62 ஆயிரம் ஏக்கர் காணிகளை இழந்து இருக்கின்றோம். ஆனால், தமிழ் மக்கள் வடக்கு மற்றும் மட்டக்களப்பில் ஏதாவது காணி பிரச்சினை வந்தால் அதற்காக எல்லோருமே ஒற்றுமையாகப் போராடி நிறைய விடங்களைச் சாதித்திருக்கின்றார்கள்.

– இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.ரி. ஹசன் அலி தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைமை குறித்து ஊடகங்களிடம் கருத்துத் 2

## தந்தையும், மகளும் கார் மோதி மரணம்

வீதியால் நடந்து சென்ற தந்தையும் மகளும் கார் மோதி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மீரிகம, பஸ்யால வீதியின் கொட்டகந்த பிரதேசத்துக்கு அருகில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மீரிகமவிலிருந்து பஸ்யால நோக்கி நேற்று மாலை பயணித்த 2

## காணிக்காக ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றும்கூட தமிழ் மக்களின் பிரதேசங்களில் காணிகள் கையகப்படும் சந்தர்ப்பங்கள் இருந்து வருகின்ற நிலையில் அதற்குக் காரணமானவர்களை ஒன்றுகூடி அவர்கள் விரட்டியடிக்கின்றார்கள். ஆனால், அம்மக்களிடம் இருக்கின்ற ஒற்றுமை எங்களிடத்தில இல்லை.

எமது ஊர்கள் யாவும் தற்போது ஒரு தனியான தீவுகளாக மாற்றப்பட்டுள்ளன. இவ்வாறான பிரதேசவாதங்களால் தான் வெளியூர் தலைவர்கள் எனக் கூறப்படுபவர்கள் இங்கு வந்து எமக்கு மேல் நின்றுகொண்டுளங்கள்பிரச்சினைகளை ஒதுக்கி வைத்துவிட்டு அவர்கள் வித்தியாசமான அரசியலைச்செய்கின்றார்கள்.

இதற்குப் பிரதான காரணம் பிரதேசவாதமாகும். எனவேதான் ஒவ்வொரு கிராமமும் தனித்தனியாகச் சிந்திப்பதைத் தவிர்க்க வேண்டும் – என்றார்.

## தமிழர்களுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் ஒரே குரலில் வலியுறுத்தினர்.

ஐக்கியநாடுகள் சபையின் அரசியல் பிரிவின் இயக்குநர் அடங்கலான குழுவினரை இன்று காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போதே கூட்டமைப்பினர் மேற்கண்டவாறு எடுத்துரைத்தனர்.

கொழும்பில் ஐ.நா. அலுவலகத்தில் ஒரு மணி நேரத்துக்கு மேலாக இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன், பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராஜா (தமிழரசுக் கட்சி), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் அரசியல் ஸ்தீரத்தன்மை அற்ற நிலைமை பற்றியும் விசேடமாக வடக்கு, கிழக்கில் தொடர்ந்து இடம்பெறும் நில அபகரிப்பு பற்றியும் எடுத்துக் கூறினோம் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

## தந்தையும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கார் மோதியதில் இவர்களிருவரும் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

54 வயதான தந்தையும் 14 வயதான மகளுமே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

மேலதிக வகுப்பு நிறைவடைந்ததன் பின்னர் மகளைத் தந்தை வீட்டுக்கு அழைத்துச் சென்ற சந்தர்ப்பத்திலேயே இந்த அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளார் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

விபத்தின் பின்னர் தப்பிச் சென்ற காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## நாற்பது மாணவி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த மாணவிகள் நேற்று கரப்பந்தாட்டப் போட்டியில் பங்கேற்றவர்கள் என்று பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

காய்ச்சல், குமட்டல் மற்றும் தலைவலி ஆகிய நோய் குணங்குறிகளுடன் மாணவிகள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## ஹிருணிகா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நீதிவான் சந்தன அமரசிங்க இன்று உத்தரவிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 15 பேர் கறுவாத்தோட்டம் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

சட்டம், ஒழுங்கைமீறல் உட்பட மேலும் சில குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பெண்கள் மீதான வன்முறைகளுக்குக் கண்டனம் தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணி நேற்று வீதிப்பேரணியையும், வீதிநாடகத்தையும் முன்னெடுத்தது.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஆரம்பமான பேரணி, ஐ.நா. அலுவலகம் சென்ற பின்னர் அங்கு வீதி நாடகம் நடத்தப்பட்டது. இதற்குப் பொலிஸார் இடையூறு விளைவித்தனர்.

அதன்பின்னர் ஜனாதிபதியின் வதிவிடம் நோக்கி மகளிர் அணி செல்ல முற்பட்ட போது , பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதன்போது வீதி நாடகத்தில் ஈடுபட்ட பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார். இதனால் பதற்ற நிலை உருவானது.

ஹிருணிகா உள்ளிட்ட குழுவினர் கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையம் நோக்கிச் சென்றனர். அங்கு சத்தியாக்கிரகத்திலும் ஈடுபட்டனர். இந்நிலையிலேயே ஹிருணிகா உள்ளிட்ட 15 பேர் கைது செய்யப்பட்டனர்.

இன்று அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் பிணை வழங்கப்பட்டுள்ளது

## வடக்கு ஆளுநர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆளுநரால் முப்படையினருக்குக் காணி சுவீகரிப்புக்கென பிரதேச செயலாளர்கள் மற்றும் காணி திணைக்களங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் விசேட கூட்டம் ஒன்றுக்கு இன்று பிற்பகல் ஒரு மணிக்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த கூட்டத்தில் பங்குபற்ற அதிகாரிகளுக்கு இடமளிக்கமாட்டோம் எனத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தை முற்றுகையிட்டு கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கூட்டத்துக்கு வருகை தந்த அதிகாரிகளும் திருப்பி அனுப்பப்பட்ட நிலையில் மேற்படி கூட்டமானது 'சூம்' முறையில் நடத்தப்படுகின்றது.

## ரயில் விபத்து......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தடைப்பட்டுள்ளது. இன்று காலை ரயில் கடவையின் குறுக்கே கவனக்குறைவாக பயணித்த கெண்டெயினர் வாகனம் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் ரயில் என்ஜின் சேதமடைந்தது. கெண்டெயினர் ரயிலுடப் மோதுண்டு தூக்கி வீசப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## தேர்தல் கோரி நீதிமன்றுக்கு!

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் எதிரணித் தரப்புகள் ஒன்றிணைந்து சென்று தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒரு கடிதத்தை – விண்ணப்பத்தை – இன்று ஒப்படைத்துள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸாவே நேரடியாக இந்தக் குழுவுக்குத் தலைமை வகித்துச் சென்று இந்தக் கடிதத்தை தேர்தல் ஆணையாளரிடம் இன்று ஒப்படைத்து இருக்கின்றார்.

முன்னர் ஆளும் கட்சியில் இருந்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், சு.கவின் செயலாளர் தயா ஜயசேகரா மற்றும் வாசுதேவ நாணயக்கார, அனுரா பிரியதர்ஷன யாப்பா போன்றோர் கூட சேர்ந்து சென்று இந்தக் கடிதத்தை ஒப்படைத்துள்ளனர்.

நடைபெறுமா, நடைபெறாதா என்று ஊசலாடிக் கொண்டிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்துவது இந்த கடிதத்தின் நோக்கம். ஆனால், உள்நோக்கம் அதையும் தாண்டியது.

இந்தத் தேர்தலை அறிவித்து நடத்தும் அதிகாரம் தற்போதைய தேர்தல் ஆணையத்துக்கு உண்டு.

ஆனால் அந்த அதிகாரம் தனது கைகளுக்கு வந்து இரண்டு மாதங்களாகியும் அதனைச் செய்யாமல் தேர்தல் ஆணையம் இழுத்தடித்து வருகின்றது.

வரும் ஜனவரி முதல் வாரத்துக்கு முன்னர் இந்தத் தேர்தலை அறிவித்தால்தான் சட்டத்தின் பிரகாரம் தற்போதைய உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் புதிய சபைகளை, தேர்தலை நடத்தி நிறுவியிருக்க முடியும்.

ஆனால் ஜனவரி முதல் வாரத்துக்கு முன்னர் இந்தத் தேர்தலை அறிவிக்கும் உத்தேசம் தற்போதைய தேர்தல் ஆணையத்துக்கு இருப்பதாகத் தெரியவில்லை

அதேசமயம் இந்தத் தேர்தலை இப்போது நடத்தும் விருப்பம் – ஈடுபாடு – அரசுத் தலைமைக்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

கடைசியாக நிறைவேற்றப்பட்ட அரசமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் புதிய அரசமைப்பு கவுன்ஸில் இன்னும் மூன்று வாரங்களுக்குள் கூட்டப்படும் சாத்தியங்கள் தென்படுகின்றன.

அந்தக் கவுன்ஸில் கூட்டப்பட்டு – அது உத்தியோக பூர்வமாகக் கூடி – ஏனைய தேர்தல் ஆணைக் குழுக்களுடன் புதிய தேர்தல் ஆணைக்குழுவையும் நியமிக்க உள்ளது.

அந்தப் புதிய தேர்தல் ஆணைக்குழுவின் நியமனத்துடன் தற்போதுள்ள ஆணைக் குழுவின் பதவி இல்லாதொழியும்.

எனவே இல்லாமல் போகப் போகின்ற ஒரு தேர்தல் ஆணையம், ஒரு தேர்தலை அறிவித்து, நடுவில் அதைக் கைவிட்டுச் செல்வதா என்ற இழுபறியும் உள்ளது.

இந்தப் பின்புலத்திலேயே இன்று இக்கடிதத்தை தேர்தல் ஆணையத்திடம் எதிர்க்கட்சிகள் ஒப்படைத்தன. உண்மையில் ஒப்படைக்கப்பட்டது ஒரு விண்ணப்பம் – ஒரு கோரிக்கை – அல்ல. அதனையும் தாண்டி, உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக தற்போதைய தேர்தல் ஆணையத்தின் முடிவை – பதிலை – தீர்மானத்தை எழுத்தில் பெறவே இக்கடிதம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பதிலின் அடிப்படையில் தேர்தலை நடத்துவதற்கான நீதியைக் கோரி, அடுத்து நீதிமன்ற வாசலை தட்டுவதற்காகத் தான் இந்த நடவடிக்கை. அதற்கான முன்னேற்பாடுதான் இது!

# பொருளாதார மீட்சி ஸ்திரதன்மையை அடிப்படையாக கொண்டமைந்த பாதீடு!

## மத்தியவங்கி ஆளுநர் நந்தலால் கருத்து



2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் பொருளாதார மீட்சி அதனை ஸ்திரப்படுத்தியவாறு எவ்வாறு முன்னோக்கி நகர்த்துவது என்பது தொடர்பாகக் கவனம் செலுத்துகின்றது என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடிகள் ஆரம்பித்ததில் இருந்து பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு உதவக்கூடிய நடுத்தர நீண்டகால பொறுளாதார வளர்ச்சிக்கு உதவக்கூடிய குறுகிய கால நடவடிக்கைகள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுவந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பின்பற்றிய சில தவறான கொள்கைகள் காரணமாக பொருளாதாரம் மேலும் மோசமாகப் பாதிக்கப்படுவதை தவிர்ப்பதற்காக அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது எனத் தெரிவித்துள்ள மத்திய வங்கி ஆளுநர், தாமதங்கள் மீட்பு நடவடிக்கையைப் பாதிக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதிகரிக்கும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவேண்டும் குறைக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியின் ஆரம்ப நாள்களில் நீண்டவரிசைகள் பலமணிநேர மின்வெட்டு போன்றன காணப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ள மத்திய வங்கி ஆளுநர், பொருளாதாரம் வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்காக சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலையேற்பட்டது வேறு தெரிவுகள் இருக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாணயக்கொள்கையை இறுக்கமாக்கியிருக்காவிட்டால் வட்டி வரிகள் போன்றவற்றை அதிகரித்திருக்காவிட்டால் பணவீக்கம் 100 வீதத்துக்கும் அதிகமானதாக காணப்பட்டிருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கு காணிகளை உறுதிப்படுத்துபவர்களுக்கு உதவத் தயார் என்று ஆளுநர் ஜீவன் தெரிவிப்பு!



யாழில் 2 ஆயிரத்து 749 பேரின் தனியார் காணிகள் அடையாளப் படுத்தப்பட்டுள்ள நிலையில் எஞ்சியோர் தமது காணிகளை உறுதிப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு உதவுவதற்கு ஆளுநர் செயலகம் தயாராக இருப்பதாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வட மாகாணத்தில் தனியார் காணிகள் தொடர்பில் அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் நில அமைச்சகம், நில ஆணையாளர் பொது அலுவலகம், நில அளவைத் துறை ஆகியவற்றின் கூட்டங்கள் மற்றும் நிலுவையில் உள்ள தற்போதைய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அனைத்து துறையினரையும் உள்ளடக்கி ஆராயப்படும்.

கொழும்பு காணி ஆணையாளர் அலுவலகம் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள் மற்றும் காணி அதிகாரிகளால் அனைத்து நில உரிமை கோருபவர்களையும் சந்தித்து, சம்பந்தப்பட்ட துறை களுடன் தனிப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் ஆராயப்படும்.

தனியார்நிலஉரிமைகோரல்கள் அனைத்து மாவட்ட செயலாளர்கள் மாகாண நில ஆணையர், உரிமை தீர்வு பிரிவு, ஆளுநர் அலுவலகம் ஆகியவற்றுடன் இணைந்து உரிமை கோரப்பட்ட அனைத்து தனியார் நில உரிமையாளர்களின் விவரங்களையும் இந்த வருட இறுதிக்குள் மாவட்ட செயலாளர் முடிவுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

மாவட்ட செயலாளர்களால் நில உரிமை கோரல்கள் 4,004 பதிவுகள் சரிபார்க்கப்பட்ட நிலையில் 2,749 உரிமையை உறுதிசெய்யப்பட்டது. மேலும், வனவளத்துறையினரிடம் காணப்படும் நிலங்களை உரிய முறையில் அடையாளம் கண்டு பொதுப் பயன்பாட்டுக்கு பயன்படுத்துவதற்கு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழில் நேற்று விழிப்புணர்வுப் பேரணி!




சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருந்து யாழ் மாவட்ட செயலகம் வரை விழிப்புணர்வு பேரணி முன்னெடுக்கப்பட்டது.

நேற்று (திங்கட்கிழமை) காலை 7.30 மணியளவில் ஆரம்பித்த பேரணி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி ஊடாக வேம்படிச் சந்தியை அடைந்து பிரதான வீதி ஊடாக மாவட்ட செயலகத்தை அடைந்தது.

அதனைத் தொடர்ந்து மாவட்ட செயலகத்தில் விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெற்றது.

பேரணியில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், மாவட்ட செயலக, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சர்வதேச நீரிழிவு தினம் நவம்பர் 14 ஆம் திகதி உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப் படுகின்ற நிலையில் மக்களிடையே நீரிழிவு சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையால் இந்தப் பேரணி ஒழுங்கு செய்யப்பட்டது.

# கனேடிய இராணுவத்தில் வெளிநாட்டவர் சேரலாம்



டொராண்டோ, நவ.15

கனாடா இராணுவத்தில் சமீபகாலமாக உள்ள வெற்றிடங்களை நிரப்ப கடுமையான ஆள் பற்றாக்குறை நிலவி வருகின்றமையுடன், ஆயிரக்கணக்கானபணியிடங்கள் இருக்கின்றன எனவும், இந்த ஆண்டில் சுமார் 6 ஆயிரம் உறுப்பினர்களைப் புதிதாக சேர்க்க இலக்கு வைக்கப்பட்ட நிலையில், அதில் பாதி பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன எனவும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.


இந்த நிலையில் கனடாவில் நிரந்தர குடியுரிமை பெற்ற வெளிநாட்டினர் இராணுவத்தில் சேரலாம் என அந்த நாட்டின் ஈராணுவம் அறிவித்துள்ளது.

இதுவரையில், கனடாவில் வசித்து வரும் நிரந்தர குடியிருப்பாளர்கள் இராணுவ வெளிநாட்டு விண்ணப்பத்தாரர் என்கிற நுழைவுத் திட்டத்தின் கீழ் மட்டுமே இராணுவத்தில் சேர தகுதி பெற்றிருந்தனர். தனிநபர்களுக்கான இந்த திட்டம் பயிற்சிச் செலவுகளைக் குறைப்பதோடு, விமானி அல்லது டாக்டர் போன்ற சிறப்புத் தேவைகளை பூர்த்தி செய்யவும் உதவும். ஆனால் தற்போது கனடா நாட்டின் குடிமக்களை போலவே 18 வயதுக்கு மேற்பட்ட நிரந்தர குடியிருப்பாளர்கள்

இராணுவத்தில் எளிதில் சேரலாம் என்று கூறப்படுகிறது. அதேபோல் 16 வயது நிரம்பியவர்கள் பெற்றோரின் சம்மதத்துடன் இராணுவத்தில் இணையலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ராணுவத்தில் அதிகாரியாகும் எண்ணம் இருந்தால் அதற்குரிய கல்வி தகுதியை பெற்றிருக்க வேண்டும்.

மேலும், 2025 ஆம் ஆண்டுக்குள் 5 லட்சம் வெளிநாட்டவர்களுக்கு நிரந்தரக் குடியுரிமை வழங்க கனடா அரசு முடிவு செய்திருக்கிறது. எனவே இராணுவத்தில் நிரந்தர குடியுரிமை பெற்ற வெளிநாட்டினரை அனுமதிப்பதன் மூலம்ஈராணுவ பலத்தை கணிசமாக அதிகரிக்க முடியும் என கனடா இராணுவம் நம்புகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாலியில் சந்தித்தனர் பைடன்–ஜின்பிங் 3மணிநேரம் நீண்ட இருதரப்புப் பேச்சு!



பாலி, நவ.15

இந்தோனேசியாவின் பாலி நகரில் நடைபெறும் ஜி–20 உச்சி மாநாட்டிற்கு முன்னதாக, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மற்றும் சீன அதிபர் ஜி ஜின்பிங் ஆகியோர் முக்கிய சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர்.

அமெரிக்கா – சீனா நாடுகளுக்கு இடையில் நீண்ட நெடுங்காலமாக பதற்றம் நிலவி வந்த நிலையில் இரு நாடுகளுக்கும் இடையே இருதரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது. குறிப்பாக, அமெரிக்க அதிபராக ஜோ பைடன் பதவியேற்ற பின் முதல் முறையாக சீன அதிபர் ஜி ஜின்பிங்கை சந்தித்துப் பேசுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க – சீன உறவுகளை மேம்படுத்தும் நோக்கில், பைடனுடன் வெளிப்படையான!மற்றும் ஆழமான கருத்துப் பரிமாற்றத்திற்குத் தயாராக இருப்பதாக ஜி ஜின்பிங் கூறியிருந்த நிலையில், 3 மணி நேரம் நடந்த சந்திப்பில் ஜிஜின்பிங்கிடம் தைவான் மீது சீனாவின் கட்டாய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், ஜின்ஜியாங், திபெத் மற்றும் ஹொங்கொங் பகுதிகளில் சீனாவின் நடவடிக்கைகள் மற்றும் சீனாவின் மனித உரிமைகள் குறித்து ஜோ பைடன் கவலை தெரிவித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

மேலும், உக்ரைன் மீதான ரஷ்யாவின் அணு ஆயுத அச்சுறுத்தல்களை இரு தலைவர்களும் கண்டித்துள்ளமையுடன், அணு ஆயுதப் போரை ஒருபோதும் நடத்தக்கூடாது என்பதை இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர் என அமெரிக்க வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



## ஸ்லோவேனியாவின் அதிபராக பெண் பத்திரிகையாளர் தேர்வு

லுப்லியானா. நவ.15

மத்திய ஐரோப்பிய நாடான ஸ்லோவேனியாவில் கடந்த மாதம் நடைபெற்ற அதிபர் தேர்தலில் அந்நாட்டின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் அன்டே லோகார் உள்பட 7 பேர் போட்டியிட்டனர்.

இதில் யாருக்கும் வெற்றிக்கு நிர்ணயிக்கப்பட்ட வாக்குகள் கிடைக்காத நிலையில் அன்டே லோகார் அதிக வாக்குகளுடன் முதல் இடத்தையும், அவருக்கு அடுத்த நிலையில் சுயேச்சை வேட்பளராக களம் இறங்கிய பெண் சட்டத்தரணியும், முன்னாள் பத்திரிகையாளருமான நடாசா பிர்க் முசார் 2 ஆவது இடத்தையும் பிடித்தனர்.

இந்த நிலையில் இவர்கள் இருவருக்கும் இடையில் நேற்று முன்தினம் 2 ஆவது சுற்றுத் தேர்தல் நடைபெற்றது. முதல் சுற்றுத் தேர்தலில் நடாசா சுயேச்சையாகப் போட்டியிட்ட நிலையில் 2 ஆவது சுற்று தேர்தலில் அவரை பிரதமர் ராபர்ட் கோலோப்பின் மத்திய இடதுசாரி கட்சி மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் ஆதரித்திருந்தன. இந்த நிலையில் நேற்று தேர்தல் முடிவுகள் வெளியாகின.

இதில் நடாசா 54 சதவீத வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார். முன்னாள் வெளியுறவு மந்திரியான அன்ஷேலோகார் 46 சதவீத வாக்குகளுடன் தோல்வியைத் தழுவினார். இதன் மூலம் நடாசா ஸ்லோவேனியா நாட்டின் முதல் பெண் அதிபராக தேர்வாகியுள்ளார்.

அவர் அடுத்த மாதம் 23 ஆம் திகதி அதிபராகப் பொறுப்பேற்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 54 வயதான நடாசா அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டிரம்பின் மனைவி மெலனியாவுக்கு நெருக்கமானவர் என்று கூறப்படுகின்றது.

## அமெரிக்க பல்கலை மாணவனின் துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலி

வேர்ஜீனியா,நவ.15

அமெரிக்காவின் வெர்ஜீனியா பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர் என்றும், இருவர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தகவலை வேர்ஜீனியா பல்கலைக்கழகக் காவல்துறை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், தாக்குதல் நடத்தியவரை தேடும் பணி நடந்து வருகிறது. இந்த

சம்பவம் நேற்றிரவு 10.30 மணியளவில் நடைபெற்றுள்ளது. மேலும், இந்தத் தாக்குதலை நடத்தியவர் பல்கலைக்கழக மாணவரான கிறிஸ்டோபர் டார்னெல் ஜோன்ஸ் என வேர்ஜீனியப் பல்கலைக்கழக நிர்வாக தலைவர் ஜிம் ரியான் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தையடுத்து, பல்கலைக்கழகத்தின் அனைத்து வகுப்புகளும் தற்போதைக்கு நிறுத்தப்பட்டுள்ளன என பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், சந்தேகிக்கப்படும் குற்றவாளியான கிறிஸ்டோபர் டார்னெல் ஜோன்ஸ் படத்தை பொலிஸார் வெளியிட்டு அவரைத் தேடி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கடலோரப் பாதுகாப்பைப் பலப்படுத்தும் கடற்படையின் கூட்டுப் பயிற்சி ஆரம்பம்

## மும்பையில் இன்றும், நாளையும் மும்முரம்



மும்பை, நவ.15

இந்தியக் கடற்படை சார்பில் மும்பையில் இன்றும், நாளையும் கடலோரப் பாதுகாப்பை வலுப்படுத்துவது தொடர்பான கூட்டுப் பயிற்சி நடைபெறுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது..

இது தொடர்பாக இந்தியகடற்படையின்கடலோர பாதுகாப்பு படை அதிகாரி கேப்டன் சுனில்மேனன்தெரிவிக் கையில் –

இந்தியக் கடற்படையின் மேற்கு கடற்படை கட்டளைப் பீடம் சார்பில் கடலோர பாதுகாப்பு தொடர்பான கூட்டு பயிற்சி மும்பையில் இன்று செவ்வாய்க்கிழமை மற்றும் நாளை ஆகிய இரு தினங்களும் நடைபெறவுள்ளது. கடலோரப் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் நடைபெறும் இந்தப் பயிற்சியில் பல்வேறு பாதுகாப்பு அமைப்புகள் பங்கேற்கின்றன.

கடலோரக் காவல் படை மட்டுமின்றி குஜராத், மராட்டியம், கோவா, கர்நாடகாவைச் சேர்ந்த பொலிஸார் மற்றும் சுங்கத்துறை, மத்திய தொழிற் பாதுகாப்பு படை, மீன்வளத்துறை, துறைமுக அதிகாரிகள் பயிற்சியில் ஈடுபடுகின்றனர்.

பயிற்சிகளில் கலந்து கொள்ளும் பல்வேறு பாதுகாப்பு அமைப்புகளின் ஒருங்கிணைப்பு, தடையற்ற தகவல் தொடர்பு, உளவு துறை தகவல்களை பகிர்ந்து கொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்து பயிற்சியின்போது மதிப்பிடப்படும்.

மேலும் கடல் வழியாக பயங்கரவாத ஊடுருவல் மற்றும் தாக்குதல் முயற்சிகளை முறியடிக்கும் வகையில் கடலோர பாதுகாப்பு அமைப்புகளின் திறன் சோதிக்கப்படவுள்ளது. இதில் ஏதேனும் குறைபாடுகள் கண்டறியப்பட்டால் விரிவான பகுப்பாய்வு செய்து கடலோர பாதுகாப்பு எந்திரத்தை மேலும் வலுப்படுத்தி குறைபாடுகளைச் சரிசெய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். என்று அவர் தெரிவித்துள்ளார்.

# அதிக நாள்கள் முதலமைச்சர் பதவி கேரள முதல்வர் பினராயி சாதனை



திருவனந்தபுரம்,நவ.15

கேரளாவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடது ஐக்கிய ஜனநாயக முன்னணி மற்றும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி ஆகியவை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாறி மாறி ஆட்சி செய்து வந்த நிலையில் கடந்த 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில் மீண்டும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடது ஐக்கிய ஜனநாயக முன்னணி ஆட்சியைக் கைப்பற்றி காங்கிரஸ் கூட்டணி கட்சிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்நிலையில், கடந்த 2016 ஆம் ஆண்டு முதலமைச்சர் பதவி வகித்து வந்த பினராயி விஜயனுக்கே மீண்டும் முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டது. இதைதொடர்ந்து அவரே முதலமைச்சர் பதவி வகித்து வருகிறார். இந்நிலையில் தற்போது, பினராயி விஜயன் ஒரு புதிய சாதனையை நிகழ்த்தி இருக்கிறார்.

அதாவது கேரளாவில் அதிக நாள்கள் முதலமைச் சர் பதவி வகித்து வந்தவர் பட்டியலில் முதலிடத்தில் இருந்த முன்னாள் முதலமைச்சர் அச்சுதமேனனின் (2,364 நாட்கள்) சாதனையை முறியடித்து, தொடர்ந்து 2,365 நாள்களைக் கடந்து பினராயி விஜயன் பதவியில் நீடித்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.



# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளின் விடுதலை; சீராய்வுமனு தாக்கல் செய்ய காங்கிரஸ் முடிவு!

புதுச்சேரி, நவ.15

ராஜீவ் காந்தி கொலைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்ட விவகாரத்தில் காங்கிரஸ் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் சீராய்வு மனு தாக்கல் செய்வோம் என்று முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

நேருவின் பிறந்தநாள் விழா காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் நேற்றுக் கொண்டாடப்பட்டது. இதையொட்டி நேருவின் உருவப்படத்துக்கு மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் கலந்துகொண்ட முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி தெரிவிக்கையில் – ராஜீவ் காந்தி கொலையாளிகள் விவகாரத்தில் ஆளுநர் உரிய நேரத்தில் முடிவெடுக்காததால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதில் மத்திய அரசு மறுசீராய்வு மனு தாக்கல் செய்யவில்லை. இந்த விடுதலையை ஒரு சில அரசியல் கட்சிகள் கொண்டாடுகின்றன. மத்திய அரசு உச்ச நீதிமன்றில்

மறுசீராய்வு மனுதாக்கல் செய்ய வேண்டும். இல்லையெனில் காங்கிரஸ் சார்பில் மறுசீராய்வு மனு தாக்கல் செய்வோம். என்று கூறியுள்ளார்.



# வளர்ந்த இந்தியாவுக்காகக் கனவு காணுங்கள்! ஜனாதிபதி முர்மு குழந்தைகளிடம் கோரிக்கை

புதுடெல்லி, நவ.15

இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் பிறந்த தினமான நேற்று நாடு முழுவதும் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்பட்டது. இதையொட்டி பல்வேறு பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகள் ஜனாதிபதி திரவுபதி முர்முவை நேரில் சந்தித்தனர். அத்துடன், ஜனாதிபதி மாளிகையில் நடந்த இந்த நிகழ்ச்சியில், தன்னைச் சந்திக்க வந்த குழந்தைகளுக்கு இந்திய ஜனாதிபதி தனது வாழ்த்துகளையும் தெரிவித்திருந்தார்.

பின்னர் குழந்தைகளிடம் பேசும்போது அவர் தெரிவிக்கையில், குழந்தைப் பருவம், வாழ்க்கையின் முக்கிய கட்டமாகும். குழந்தைகள் அப்படியே ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். இதுவே அவர்களை உயிர்ப்புடன் வைத்திருக்கிறது. குழந்தைகளின் இந்த அப்பாவித்தனத்தையும் தூய்மையையும் இன்று நாம் கொண்டாடுகிறோம். ஒவ்வொரு தலைமுறையும் புதிய சாத்தியங்களையும், புதிய கனவுகளையும் கொண்டு வருகிறது. இது ஒரு தொழில்நுட்பம் மற்றும் தகவல் புரட்சிக்கான சகாப்தம் ஆகும்.

குழந்தைகள் தற்போது பல்வேறு உள்நாட்டு, சமூக, சுற்றுச்சூழல் பிரச்சினைகளை அறிந்து வைத்திருக்கிறார்கள். தொழில்நுட்பத்தின் வருகையால், அறிவும், தகவல்களும் இப்போது விரல் நுனியில் உள்ளன. எனவே அவர்களுக்கு சரியான மதிப்பீடுகளைக் கற்பிக்க அதிக முயற்சிகளை மேற்கொள்வதும், பல்வேறுவ் செயல்பாடுகள் மற்றும் விவாதங்களில் அவர்களை ஈடுபடுத்துவதும் மிக முக்கியமானதாகும். குழந்தைகளிடமிருந்தும் நாம் நிறைய கற்றுக்கொள்ளலாம்.

குழந்தைகளே! நீங்கள் பெரிதாகக் கனவு காணுங்கள். ஒரு புதிய மற்றும் வளர்ந்த இந்தியாவுக்காக கனவு காணுங்கள். இன்றைய அந்த கனவுகள் நாளை நனவாகும். நீங்கள் வளரும்போது எந்த மாதிரியான இந்தியாவில் வாழ விரும்புகிறீர்கள் என்று சிந்தியுங்கள். பலனைப்பற்றிக் கவலைப்படாமல் உங்கள் கடமையைச் செய்து வாருங்கள். இது தானாகவே உங்களை மிகப்பெரிய வெற்றியை நோக்கி கொண்டு செல்லும்.

இன்று நீங்கள் தேர்ந்தெடுக்கும் பாதை வருகிற நாள்களில் இந்தியாவின் பயணத்தை முடிவு செய்யும். நீங்கள் வளரும்போதும் உங்களுக்கு உள்ளே இருக்கும் குழந்தைத்தனத்தை உயிர்ப்புடன் வைத்திருங்கள். இந்தியாவின் கலாசாரத்துடன் தொடர்ந்து இணைந்திருங்கள். உங்கள் பெற்றோரை எப்போதும் மதியுங்கள். தாய்நாட்டையும் எப்போதும் நேசியுங்கள். என்று இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

# தமிழ்க் கூட்டமைப்புக்கு பின்னால் தமிழினம் தறி கெட்டு நிற்கின்றது!




## சமாச தலைவர் லோகநாதன் ஆதங்கம்

(நூருல் ஹுதா உமர்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தமிழ் சமூகம் சரியாக பயன்படுத்தவே இல்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு பின்னால் சென்று, தறி கெட்டு நிற்கின்றது என்று அம்பாறை, கல்முனை மாவட்ட சிக்கனக் கடனுதவு கூட்டுறவுசங்க சமாசத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

மல்வத்தை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தை புனரமைப்பு செய்யும் பொது கூட்டம் மல்வத்தை வளாகத்துக்கு அண்மையில் திங்கட்கிழமை இவரின் தலைமையில் இடம் பெற்றது. இதில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் மார்க் கண்டு கமலரதன் பேராளராக கலந்து கொண்டார். புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு ஆவணங்கள் சம்பிரதாய பூர்வமாக சங்கத்தின் புதிய தலைவரிடம் கையளிக்கப்பட்டன. இதன் போது சமாச தலைவர் லோகநாதன் அங்கு கூறியவை வருமாறு:-

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகப் பதவி வகித்து வருகின்ற ஒரேயொரு தமிழர் டக்ளஸ் தேவானந்தா ஆவார். கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு அமைச்சரவை அமைச்சர் பதவி வழங்கப்படவில்லை. வியாழேந்திரன், பிள்ளையான் ஆகியோர் இராஜாங்க அமைச்சர்கள்தான். கூட்டுறவு துறை இராஜாங்க அமைச்சராக வியாழேந்திரன் உள்ளார். இவர் மிகவும் துடிப்பானவர். இவரை கூட்டுறவு துறை அமைச்சரவை அமைச்சராக நியமிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ர்ணில் விக்கிரம்சிங்கவை எமது சமாசம் கோருகின்றது.

நான் தலைவர் அஷ்ரப்பை மதிக்கின்றேன். ஏனென்றால் அவர் தமிழ் மக்களுக்கும் சேவை ஆற்றி உள்ளார். குறிப்பாக 90 இல் இடம்பெற்ற இன வன்செயலில் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மல்வத்தை மக்களை மீள்குடியேற்றினார். இங்கு கட்டடங்கள் அமைத்து தந்து உள்ளார். மல்வத்தை பிரதேச மக்களுக்கு தனியான பிரதேச சபை வேண்டும். நாம் இதை தமிழர்களுக்காக மாத்திரம் கோரவில்லை. இங்கு உள்ள முஸ்லிம், சிங்கள மக்களுக்காகவுமே கோரி வருகின்றோம். இது எமது மிக நீண்ட கால கோரிக்கை ஆகும்.

முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் அண்மையில் எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டு இருக்கின்றது. மல்வத்தை பிரதேச சபையை பெறுவதற்கு மகத்தான வாய்ப்பாக இதை பயன்படுத்த வேண்டும். ஆணைக்குழுவை வரவேற்று வாழ்த்துகின்ற அதே நேரம் மல்வத்தையில் தனியான பிரதேச சபையை ஏற்படுத்தி தர வேண்டும் என்று கோரி நிற்கின்றோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமும் கோருகின்றோம். -என்றார்..

# திருமலையில் சர்வதேச நீரிழிவு தின விழிப்புணர்வும் கண்காட்சி நிகழ்வும்







(அபு அலா , இரா.ரஜீந்திரமூர்த்தி)

சர்வதேச நீரிழிவு தினத்தையொட்டி கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் மற்றும் இந்தியத் தூதரகம் இணைந்து திருகோணமலை, கப்பல்துறை தள ஆயுர்வேத வைத்தியசாலை ஊடாக நடத்திய சர்வதேச நீரிழிவு தின விழிப்புணர்வுச் செயற்பாடும், கண்காட்சியும் நேற்றும் இன்றும் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றன.

கப்பல்துறை தள ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அன்டென் அனஸ்ரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்திய தூதரகத்தின் யாழ்ப்பாண அலுவலக துணைத் தூதர் ஶ்ரீ ராக்கேஷ் நட்ராஜ் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், விசேட அதிதிகளாக கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் திருமதி இ.ஶ்ரீதர், திருகோணமலை நகரசபை செயலாளர் வி.ராஜசேகர் மற்றும் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்த விழிப்புணர்வுக் கண்காட்சியில் நீரிழிவு நோய்க்கான இரத்தப் பரிசோதனைகளுடன் மருத்துவ ஆலோசனைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

அத்துடன், நீரிழிவு நோயை எவ்வாறு கட்டுப்படுத்தி சுக வாழ்வுடன் வாழவேண்டும் என்ற ஆலோசனை வழிமுறைகள் பற்றிய தெளிவான விளக்கங்களை வைத்தியர்கள் வழங்கினர். அது தொடர்பிலான வழிகாட்டிக் கையேடுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும், திருகோணமலை பல்கலை உள்ளகப்பயிற்சி வைத்தியர்களினால் யோகாப் பயிற்சி செய்முறைகளும் செய்து காட்டப்பட்டு அதுதொடர்பிலான விளக்கங்கள் அதிதிகளுக்கும், பொதுமக்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டன.

பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்ட உணவுகள் காட்சிப்படுத்தப்பட்ட அதேவேளை பொதுமக்கள் கொள்வனவு செய்வதற்காக அந்த உணவு வகைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# காரைதீவுப் பிரதேச சபைக் கூட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் பிரசன்னம்

(காரைதீவு நிருபர் சகா)

தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சபை உறுப்பினர்களின் மனைவிமார், பிள்ளைகள், குடும்பத்தினர் பார்வையாளர்களாகப் பங்குபற்றிய முதல் அமர்வு காரைதீவு பிரதேச சபையில் நேற்று இடம்பெற்றது

காரைதீவு பிரதேச சபையின் 57 ஆவது மாதாந்த சபை அமர்வு நேற்று சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் சபா மண்டபத்தில் நடைபெற்றது.

அச்சமயம் வழமைக்கு மாறாக , பல்கலைக்கழக மாணவர்களும், உறுப்பினர்களின் மனைவிமார் குழந்தைகள் உட்பட குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும்.

இதுவரை இவ்வாறு ஒரு சம்பவம் இடம்பெற்றதில்லை.

நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விபசார விடுதி என்று கூறிய நாடாளுமன்ற உறுப்பினருக்கு தவிசாளர் கண்டனம் தெரிவித்து பேசினார்.

உபதவிசாளர் ஏ.எம்.ஜாகீர், உறுப்பினர்களான இஸ்மாயில், பஸ்மீர், நேசராசா, மோகனதாஸ், ஜெயராணி, சசிக்குமார், குமாரசிறி, றணீஸ் ஆகிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து ,காரைதீவு பிரதான வீதியில் அமைந்துள்ள மதுபான சாலை அகற்றப்பட வேண்டும் என்ற பிரேரணையில் தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள் அனைவரும் ஏகோபித்த கருத்துக்களை பரிமாறினார்கள்.

அவரவர் ஆசனங்களிலே புதிதாக பொருத்தப்பட்ட ஒலி வாங்கி மற்றும் பெயர்ப்பலகை சகிதம் உறுப்பினர்கள் அனைவரும் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

இறுதியாக, தவிசாளரின் விசேட விருந்துபசாரம் இடம்பெற்றது.





# தாள்களை கையிலேந்தி சபைக்கு வந்த நிதியமைச்சர் ஒரு தடவை கூட கைதட்டுப் பெறாத பாதீட்டு உரை!

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நேற்று (திங்கட்கிழமை) பிற்பகல் 01.30 மணியளவில் சபையில் சமர்ப்பித்த ஜனாதிபதியும், நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க சுமார் ஒரு மணித்தியாலமும் 15 நிமிடங்களும் உரையாற்றினார்.

வழக்கமாக வரவு செலவுத் திட்ட உரையை ஆற்றுவதற்காக நிதியமைச்சர் சபைக்குள் வருகை தரும் போது கையில் வரவு – செலவுத் திட்ட உரை அடங்கிய பெட்டியை அல்லது கோப்பியைக் கொண்டு வருவார். ஆனால் தற்போதைய நிதியமைச்சரான ரணில் விக்கிரமசிங்க தனது வரவு – செலவுத் திட்ட உரை அடங்கிய தாள்களையே கையில் கொண்டு வந்தார்.

பாராளுமன்றம் பிற்பகல் 01.30 மணிக்கு கூடிய நிலையில் சபாநாயகர் தின பணிகளை முடித்து நிதியமைச்சரை வரவு – செலவுத் திட்ட உரையை ஆற்றுமாறு அறிவித்ததைத் தொடர்ந்து அரச தரப்பினரின் வரவேற்புடன் அமைச்சர்கள் புடைசூழ சபைக்குள் வந்த நிதியமைச்சர் ரணில் விக்கிரமசிங்க 2023 ஆம் ஆண்டுக்கான தனது வரவு – செலவுத் திட்ட உரையை பிற்பகல் 01.35 மணிக்கு ஆரம்பித்து ஒரு மணிநேரமும், 15 நிமிடங்களும் உரையாற்றி 2.50 இற்கு நிறைவு செய்தார்.

வழக்கமாக வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றும் நிதியமைச்சர்கள் மக்கள் சார்ந்த நிவாரன அறிவிப்புக்கள் மேலும் சில அறிவிப்புக்களை வெளியிடும் போது அரச தரப்பினர் சில வேளைகளில் எதிர்க் கட்சியினர் கூட அந்த அறிவிப்புக்களை மேசைகளில் தட்டி வரவேற்பது வழக்கம். ஆனால் இன்று நிதியமைச்சரின் ஒரு மணித்தியாலத்துக்கும் அதிக நேரம் நீண்ட உரையின் போது அவரின் ஓர் அறிவிப்பிற்கு கூட அரச தரப்பினரோ, எதிர்க்கட்சியினரோ கைதட்டவில்லை. மாறாக இரு தரப்பினரும் இறுகிய முகங்களுடன் உரையை செவிமெடுத்துக் கொண்டிருந்தனர்.

## யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தினால் மரம் நடுகைத் திட்டம் முன்னெடுப்பு!








யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகமும் நல்லூர் வடக்கு சனசமூக நிலையமும் இணைந்து ஜே-257 கிராமசேவகர் பிரிவிலுள்ள தெரிவு செய்யப்பட்ட நூறு குடும்பங்களுக்கு வீட்டுத்தோட்டப் பயிர்கள், மரக்கன்றுகள், இயற்கைப் பசளைகள் என்பவற்றை அண்மையில் வழங்கிவைத்தன.

இந்த நிகழ்வு நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

லயன்ஸ் கழகத்தின் மரநடுகைக்கு பொறுப்பான மாவட்ட தலைவர் லயன் கு.ஜெயந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மரநடுகை சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்றும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தலைமை விருந்தினராக

லயன்ஸ் கழக சர்வதேச பணிப்பாளர் லயன் சுனில் வட்டவலவும் கௌரவ விருந்தினராக லயன்ஸ் கழகத்தின் கவுன்ஸில் தலைவர் வைத்தியர் லயன் வை.தியாகராஜாவும் சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானமும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் பயனாளிகள்,லயன்ஸ் கழக உறுப்பினர்கள், நல்லூர் வடக்கு சனசமூக நிலைய உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## கிழக்கு மாகாண ஆளுநரை சந்தித்த வியட்நாம் தூதர்!



கிழக்கு மாகாணத்தின் வர்த்தகர்கள் மற்றும் வியட்நாம் இலங்கைத் தூதுவர் ஹோ தி தான் ட்ரூக் மற்றும் மாகாண ஆளுநர் அனுராதா யம்பத் ஆகியோர் தலைமையில் வியட்நாம்–இலங்கை வர்த்தக உச்சி மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் பாசிக்குடா அமயா பீச் ஹோட்டல் வளாகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தில் வியட்நாம் வர்த்தகர்களுக்கு புதிய முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் தொடர்பாக நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேலும், கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூர் வர்த்தகர்கள் வியட்நாமில் செய்யக்கூடிய முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பாகவும் பேசப்பட்டது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு பொருள்களை வியட்நாமுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் பற்றியும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் வியட்நாமிய முதலீட்டாளர்களுக்கு இயன்றளவு வசதிகளை வழங்குவதாக ஆளுநர் தெரிவித்தார்.

இந்த சந்திப்பிற்கு முன்னதாக, அதே ஹோட்டல் வளாகத்தில் ஆளுநருக்கும் வியட்நாம் தூதுவருக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்றும் இடம்பெற்றதுடன், இரு நாடுகளின் சுற்றுலா, பொருளாதார மற்றும் கலாசார விடயங்கள் பலவும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, காத்தான்குடி நகர சபை தலைவர் எஸ்.எச்.எம்.அஸ்வர், கிழக்கு மாகாண வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் ஹரி பிரதாப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பாடசாலை மாணவர்களுக்கு முதல் தடவையாக அனுமதி!







நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் 01.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்காக கூடியது. வழக்கமாக வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது பொது மக்கள் கலரி மூடப்பட்டு அரச அதிகாரிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவது வழக்கம். ஆனால் இம்முறை முதல் தடவையாக குறிப்பிட்ட சில பாடசாலைகளை சேர்ந்த 450 பாடசாலை மாணவ தலைவர்கள் நிதியமைச்சரின் வரவு – செலவுத் திட்ட உரையை அவதானிப்பதற்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அதேபோன்று வழக்கத்துக்கு மாறாக சபாநாயகர் கலரியிலும் வெளிநாடுகளின் தூதுவர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் என 40 இற்கும் மேற்பட்டவர்கள் அமர்ந்திருந்தனர்.

## பலாலி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள துறைமுகங்கள் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் இன்று காங்கேசன் துறைமுகம் மற்றும் பலாலி விமான நிலையத்தைப் பார்வையிட்டதோடு அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கும் போதே மற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டுக்குப் பெரும் வருமானத்தை ஈட்டித் தந்த காங்கேசன் துறைமுகம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அழிவடைந்து தற்போது பயன்பாட்டில் இல்லை. இவ்வாறான சம்பவங்கள் மூலமே எமது நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கு நாங்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது

அந்தப் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாங்கள் மீள வேண்டுமாக இருந்தால் காங்கேசன்துறை போன்ற பொருளாதாரத்தை ஈட்டக்கூடிய இடங்களை நாங்கள் மீளப் புதுப்பித்து அவற்றைச் செயல்படுத்துவதன் மூலமே நாட்டுக்கு வருமானம் கிடைக்கும்

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அந்த வேலைத்திட்டத்தில் மிகவும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றார். அதன் காரணமாகவே இன்று காங்கேசன் துறைமுகத்துக்கு நேரடியாக அமைச்சர் என்ற ரீதியில் நான் விஜயம் மேற்கொண்டு இங்கே மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பில் நான் ஆராய்ந்து இருக்கின்றேன்.

குறிப்பாக இந்திய நாட்டின் உதவியையும் நாங்கள் கோரவுள்ளோம் . ஏற்கனவே நாங்கள் இந்திய நாட்டின் உதவியுடன் சில வேலைத்திட்டங்களை இங்கே முன்னெடுத்து இருக்கின்றோம். ஆனால், இங்கே பல வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. அவ்வாறான வேலைத்திட்டங்களை விரைவில் ஆரம்பித்து மிக விரைவில் இந்தக் காங்கேசன் துறைமுகத்தைச் செயற்படுத்துவதற்கு நாங்கள் முனைகின்றோம்.

அதேபோல் பலாலி சர்வதேச விமான நிலையமும் நமக்கு ஒரு வருமானத்தை ஈட்டக்கூடிய ஒரு விமான நிலையம் ஆகும். அந்த விமான நிலையமும் ஓரிரு மாதங்களில் விரைவில் செயற்படுத்தப்படும் – என்றார்.

'அமைச்சர் ஒருவர் இந்தியாதான் அந்த விமான நிலையத்தைச் செயற்படுத்துவதற்குத் தடையாக இருக்கின்றாரா என்று கூறியுள்ளாரே?' என்று ஊடகவியலாளர் வினவிய போது,

முதலில் அவ்வாறு பிரச்சினை இருந்தது. ஆனால், எல்லாம் பேசி சமரச முயற்சியில் ஈடுபட்டு தற்போது எல்லா விடயங்களும் நிறைவடைந்து விட்டன. ஓரிரு மாதங்களில் பலாலி விமான சேவையும் ஆரம்பிக்கப்படவுள்ளது. அவ்வாறு ஆரம்பித்தால் இலங்கையில் உள்ள மூவின மக்களும் குறிப்பாக வடக்கு, கிழக்கில் உள்ள மக்களும் ஒன்றிணைந்து இந்த நாட்டில் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியும். ஆனால், இவை விரைவில் சாத்தியப்பட வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் – என்றார்.

## இலங்கை, இந்திய......







மற்றும் இலங்கை பகுதியைச் சேர்ந்த 14 பேரை இந்திய கடலோர காவல்படை கைது செய்துள்ளனர்.

இந்தியக் கடலோரக் காவல் படைக்கு சொந்தமான ரோந்துக் கப்பல் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது நடுக்கடலில் சட்டவிரோதமாக பீடி இலை மூட்டைகளைப் படகில் பரிமாறிக் கொண்டிருந்த தமிழக மற்றும் இலங்கைப் பகுதியைச் சேர்ந்த 14 நபர்களை இந்தியக் கடலோரக் காவல் படை கைது செய்தது.

கடத்தலுக்கு பயன்படுத்திய நான்கு படகுகள் மற்றும் 3 தொன் எடை கொண்ட பீடி இலைகளை பறிமுதல் செய்த இந்திய கடலோர காவல்படை , தூத்துக்குடி துறைமுகத்திற்கு கைது செய்யப்பட்டவர்களை கொண்டு செல்கின்றது.

கைது செய்யப்பட்ட 14 பேரில் 8பேர் தமிழகத்தையும் ஆறுபேர் இலங்கையைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.11.2022 இல் வெளியிடப்பெற்றது.